

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2025) கஜகஸ்தான் நாட்டில் உலக வாள்வீச்சு கூட்டமைப்பு (FIE) நடத்தும் ஜூனியர் உலக கோப்பை வாள்வீச்சு போட்டியில் பங்கேற்க உள்ள தமிழ்நாடு வீராங்கனை செல்வி. ஜெஃப்லினா சாம் அவர்களுக்கு செலவினத் தொகையாக ரூ.3.15 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. ஆகியோர் உடனிருந்தனர்.

### புழல் எம். நாராயணன் முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் கண்டனக் கூட்டத்தில் திரளாக பங்கேற்க தீர்மானம்!

மாதவரம், பிப். 8-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் மாத்தூர் 19வது வட்டம் இரண்டாவது பிரதான சாலை அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை போக்கை கண்டித்து மாதவரம் சட்டமன்ற தொகுதி செங்குன்றம் பேருந்து நிலையம் அருகே 8.2.2025 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து கண்டன உரையாற்றுகிறார்

இக்கண்டனக் கூட்டத்தில் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என,மாதவரம் வடக்கு பகுதி திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் 19வது வட்டம் மாத்தூர் இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச் செல்வன் வரவேற்றார்.

பகுதி அவைத்தலைவர் வி. திராவிட வீரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள் ஆ. ராஜேந்திரன், க. காசிநாதன், ஆர். முரளி, பி .நிர்மல் குமார், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி .தரணி, வி.கார்த்திகேயன், ஜிம் கே. ராஜா, கே. செல்வன்.

வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, இ. கண்ணப்பன், பி. எஸ். சந்துரு, வி. ஆர். குப்பன், கே. கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வருகின்ற எட்டாம் தேதி மாலை 6 மணிக்கு ஒன்றிய அரசை கண்டித்து செங்குன்றத்தில் நடைபெறும் மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் அன்பு அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டத்திற்கு மாதவரம் வடக்கு பகுதியில் இருந்து திரளாக கலந்து கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எட்டாம் தேதி மாதவரம் புனித நாள் கல்லூரியில் நடைபெறும் வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொள்வது எனவும் இளைஞர்களை நிறைய பேர் பங்கேற்கும் அளவில் செய்ய வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு ,மாவட்ட ஆதிதிராவிடர்நல குழு துணை அமைப்பாளர் கே. ஏழுமலை, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அம்மு மூர்த்தி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச். பீர் முகமது, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மனோகரன், மாவட்ட இலக்கிய அணி வசிம் முகமது, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி. துரைசாமி, எஸ். கருணாகரன், இலக்கிய அணி மாவட்ட துணைத் தலைவர் துரை தசரதன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் எம் .அமுதா, ஆர். சுதா, எஸ். கலைச்செல்வி, பகுதி மாணவரணி அமைப்பாளர் த. விக்னேஸ்வரன் பகுதி பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன்

மேலும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் செயல்வீரர்கள் என பலர் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.

### பாளையங்கோட்டை வட்டத்தில்

# முடிவுற்ற நிரந்திர சீரமைப்புப் பணிகள்!

## நீர்வளத்துறை கூடுதல் செயலர் டாக்டர் க.மணிவாசன் ஆய்வு!

நெல்லை, பிப். 8-

நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், தமிழாகுறிச்சி அணைக்கட்டில் முடிவுற்ற நிரந்தர சீரமைப்புப் பணியினை நேற்று (07.02.2025) ஆய்வு செய்தார்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டத்தில் சுமார் 191 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும் வகையிலும், நிலத்தடி நீர் அபிவிருத்தியடையும் வகையிலும், திடியூர் கிராமத்தில் பச்சையாற்றின் குறுக்கே உள்ள தமிழாகுறிச்சி அணைக்கட்டில் கடந்த 14.05.2024 அன்று மேற்கொள்ளப்பட்டு 30.10.2024 அன்று முழுவதுமாக முடிவுற்ற நிரந்தர சீரமைப்பு பணியினை நேற்று (07.2.2025) நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது நீர்வளத்துறை முதன்மை தலைமை பொறியாளர் சா.மன்மதன், நீர்வளத்துறை மதுரை மண்டல தலைமை பொறியாளர் எஸ்.ரமேஷ் மற்றும் கண்காணிப்பு பொறியாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.


ஓரவஞ்சனை ஒன்றிய அரசை கண்டித்து - சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்


# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கண்டன உரை!

மாதவரம் வடக்கு பகுதி கழகத்தினருக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வேண்டுகோள்!

கேஸ் விலை உயர்வு, நீட் தேர்வு ரத்து செய்ய மறுப்பு, விவசாயிகள் வஞ்சிப்பு, வெள்ள நிவாரண நிதி வழங்குவதில் பாராபட்சம் என்று தொடர்ந்து நம்நாட்டை வஞ்சித்து, இறுதியில் தமிழ்நாடு என்கின்ற பெயரே பட்ஜெட்டில் இல்லாத அளவிற்கு புறக்கணித்து, ஓரவஞ்சனையாய் செயல்படும் ஒன்றிய அரசை கண்டித்து, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (8.2.2025 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, செங்குன்றம் பேருந்து நிலையம் அருகே மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும் கண்டனப் பொதுக்கூட்டத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் தஞ்சை கூத்தரசன் ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.

அது சமயம் மாதவரம் வடக்கு பகுதிக்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக இளைஞரணி உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் என அனைவரும் குறித்த நேரத்திற்கு திரண்டு வந்து, கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கண்டனத்தை ஒன்றிய அரசுக்கு எதிராக பதிவு செய்ய வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**புழல் எம்.நாராயணன்**
செயலாளர் - மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம், பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் முன்னிலையில் மாத்தூர் 19வது வட்டம் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. 19ஆவது வட்டச் செயலாளர் கா.தாமரைச்செல்வன் வரவேற்பில், பகுதி அவை தலைவர் வி.திராவிட வீரன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், ஒன்றிய பாஜக அரசை கண்டித்து செங்குன்றத்தில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் கண்டன பொதுக்கூட்டத்தில் திரளாக கலந்து கலந்து கொண்டு, ஒன்றிய அரசுக்கு கண்டனத்தை தெரிவிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் ஆ.ராஜேந்திரன், க.காசிநாதன், ஆர்.முரளி, பி.நிர்மல் குமார், நா.மோகன் குமார், பா.சந்திரன், பி.தரணி, வி.கார்த்திகேயன், ஜிம்கே ராஜா, கே.செல்வன், வட்ட செயலாளர்கள் கே.அங்குசாமி, இ.கண்ணப்பன், பி.எஸ். சந்துரு, வி.ஆர்.குப்பன், கே.கருணாகரன், ஆர்.பாபு, கே.ஏழுமலை, அம்மு மூர்த்தி, எஸ்.உதயகுமார், எச்.பீர் முகமது, இ.எம். மனோகரன், வசீம் முகமது, பி.துரைசாமி, எஸ்.கருணாகரன், துரை தசரதன், எம். அமுதா.ஆர்.சுதா, எஸ்.கலைச்செல்வி, த.விக்னேஸ்வரன், எம்.என்.அஜய்தென்னவன் உள்ளிட்ட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### 2023ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூல்களைப் படைத்த

# நூலாசிரியர்கள் - பதிப்பகத்தாருக்கு பரிசுத் தொகை - சான்றிதழ்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, பிப். 8-

சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின்கீழ் 2023 ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூல்களைப் படைத்த நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (07.02.2025) தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக அரங்கில் வழங்கினார்.

தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக செயற்படுத்தப்படும் சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின் வாயிலாக 33 வகைப்பாடுகளில் நூல்கள் பெறப்பட்டு ஒவ்வொரு நூலையும் மூன்று அறிஞர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து சிறந்த படைப்புகள் தெரிவு செய்யப்படுகின்றன. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் இவ்வகையில் தெரிவு செய்யப்பெற்ற நூலை எழுதிய நூலாசிரியருக்கு ரூ.30,000/-மும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூ.10,000/-மும் என்று தொகை உயர்த்தப்பட்டு 2011 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பெற்று வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞரின் அடியொற்றி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 24.06.2024ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறை மானியக்கோரிக்கையின் போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் சிறந்த நூலை எழுதிய நூலாசிரியருக்கு

ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாகவும் பதிப்பகத்தாருக்கு

ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாகவும் பரிசுத்தொகை உயர்த்தி வழங்கப்படும்". என்று அறிவிக்கப்பட்டது.

அறிவிப்பினை செயற்படுத்தும் வகையில் 2023ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பெற்ற சிறந்த நூலை எழுதிய நூலாசிரியருக்கும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கும் உயர்த்தப்பட்ட வகையில் பரிசுத் தொகை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2023ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்று சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின்கீழ் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்ட மரபுக் கவிதை எனும் வகைப்பாட்டில் வேலுநாச்சியார் காவியம் எனும் நூலை எழுதிய புதுகை வெற்றிவேலன் அவர்களுக்கும் பதிப்பித்த அருண் பதிப்பகத்தாருக்கும், புதுக் கவிதை எனும் வகைப்பாட்டில் இதயக்கனல் ஈன்ற குழந்தை எனும் நூலை எழுதிய என்.எஸ்.கலைவரதன் அவர்களுக்கும் பதிப்பித்த செல்வகமலம் பதிப்பகத்தாருக்கும் புதினம் எனும் வகைப்பாட்டில் அடையாற்றுக்கரை எனும் நூலை எழுதிய மு.து.பிரபாகரன் அவர்களுக்கும் பதிப்பித்த டிஸ்கவரி பதிப்பகத்தாருக்கும், சிறுகதை எனும் வகைப்பாட்டில் தாமரையும் அருக்காணியும் எனும் நூலை எழுதிய சந்துரு மாணிக்கவாசகம் அவர்களுக்கும் பதிப்பித்த தமிழ் வெளி பதிப்பகத்தாருக்கும், நாடகம் (உரைநடை, கவிதை) எனும் வகைப் பாட்டில் அர்ஜுனன் மகன் அரவான்களப்பலி எனும் நூலை எழுதிய கா. பாலகங்காதரன் அவர்களுக்கும் பதிப்பித்த டி.கே பதிப்பகத்தாருக்கும், சிறுவர் இலக்கியம் எனும் வகைப்பாட்டில் முத்தமிழறிஞரின் முத்துமொழிக்கதைகள் எனும் நூலை எழுதிய செல்வி ஹரிவர்ஷ்னி ராஜேஷ் அவர்களுக்கும் பதிப்பித்த மகேஸ்வரி பதிப்பகத்தாருக்கும், திறனாய்வு எனும் வகைப் பாட்டில் வாசகநோக்கில் நம்கால மகாகவி எனும் நூலை எழுதிய தி.அமிர்தகணேசன் அவர்களுக்கும் பதிப்பித்த ஒரு துளிக் கவிதை பதிப்பகத்தாருக்கும், மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி இலக்கணம் எனும் வகைப்பாட்டில் மரபுக்கவிதை எழுதலாம் எனும் நூலை எழுதிய முனைவர் சொற்கோ இரா. கருணாநிதி அவர்களுக்கும் பதிப்பித்த இராஜா பதிப்பகத்தாருக்கும், பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் எனும் வகைப்பாட்டில் கலைஞர் மு.கருணாநிதி வரலாறு எனும் நூலை எழுதிய சந்தியா நடராஜன் அவர்களுக்கும் பதிப்பித்த வ.உ.சி பதிப்பகத்தாருக்கும், நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்) எனும் வகைப்பாட்டில் இனக்குழுச் சமூகமும் இசையும் எனும் நூலை எழுதிய வே.கண்ணதாசன் அவர்களுக்கும் பதிப்பித்த பரிசல் பதிப்பகத்தாருக்கும், அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் எனும் வகைப்பாட்டில் பழங்குறிப்புகள் கலைக்களஞ்சியம் எனும் நூலை எழுதிய சு. சிவா அவர்களுக்கும் பதிப்பித்த காலச்சுவடு பதிப்பகத்தாருக்கும், பயண இலக்கியம் எனும் வகைப்பாட்டில் மனம் மறக்கா அமெரிக்கா எனும் நூலை எழுதிய பேராசிரியர் முனைவர் ஹாஜாகனி அவர்களுக்கும் பதிப்பித்த நன்னூல் பதிப்பகத்தாருக்கும், வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு எனும் வகைப்பாட்டில் தமிழ்ச் சமயசான்றோர் தணிகைமணி வ.சு.செங்கல்வராயபிள்ளை எனும் நூலை எழுதிய பா. எழில் செல்வன் அவர்களுக்கும் பதிப்பித்த சிவாலயம்

பதிப்பகத்தாருக்கும், நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு எனும் வகைப் பாட்டில் சோழர்கள் இன்று எனும் நூலை எழுதிய சமஸ் அவர்களுக்கும் பதிப்பித்த தாமரை பிரதர்ஸ் பதிப்பகத்தாருக்கும், கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் எனும் வகைப் பாட்டில் தமிழர் காலக் கணிதம் எனும் நூலை எழுதிய பெ.கணேசன் அவர்களுக்கும் பதிப்பித்த பொதிகை மைந்தன் பதிப்பகத்தாருக்கும், பொறியியல், தொழில் நுட்பவியல் எனும் வகைப்பாட்டில் சொல்லித் தெரிவதில்லை கட்டிடக் கலை எனும் நூலை எழுதிய இ. உதயகுமார் அவர்களுக்கும் பதிப்பித்த பிராம்ப்ட் பதிப்பகத்தாருக்கும், மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் எனும் வகைப்பாட்டில் ஐவ்வாது மலை வாழ்வும் வரலாறும் எனும் நூலை எழுதிய க. ஜெய்சங்கர் அவர்களுக்கும் பதிப்பித்த வசந்தவேல் பதிப்பகத்தாருக்கும், சட்டவியல், அரசியல் எனும் வகைப்பாட்டில் பிரிவினையின் பெருந்துயரம் எனும் நூலை எழுதிய க. இராமசாமி அவர்களுக்கும் பதிப்பித்த சுவாசம் பதிப்பகத்தாருக்கும், பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல் எனும் வகைப்பாட்டில் இந்தியப் பொருளாதாரம் அம்பேத்கரியப் பார்வை எனும் நூலை எழுதிய மு. நீலகண்டன் அவர்களுக்கும் பதிப்பித்த புரட்சி பாரதி பதிப்பகத்தாருக்கும், மருந்தியல், உடலியல், நலவியல் எனும் வகைப்பாட்டில் "நமது முளை - நமது எதிர்காலம்" எனும் நூலை எழுதிய மு.அ.அலீம் அவர்களுக்கும் பதிப்பித்த எழுத்து பதிப்பகத்தாருக்கும், தமிழ் மருத்துவ நூல்கள் (சித்த, ஆயுர்வேதம்) எனும் வகைப்பாட்டில் நல்வாழ்விற்கு சித்த மருத்துவம் எனும் நூலை எழுதிய மருத்துவர் மானக்சா அவர்களுக்கும் பதிப்பித்த ஸ்ரீசெண்பகா பதிப்பகத்தாருக்கும், சமயம், ஆன்மிகம், அளவையியல் எனும் வகைப்பாட்டில் கம்பனும் வைணவமும் எனும் நூலை எழுதிய

ந. செல்லக்கிருஷ்ணன் அவர்களுக்கும் பதிப்பித்த கபிலன் பதிப்பகத்தாருக்கும், கல்வியியல், உளவியல் எனும் வகைப்பாட்டில் பல்வகை நுண்ணறிவுகள் எனும் நூலை எழுதிய ச. வின்சென்ட் அவர்களுக்கும் பதிப்பித்த எதிர் வெளியீடு பதிப்பகத்தாருக்கும், வேளாண்மையியல், கால்நடையியல் எனும் வகைப் பாட்டில் "பாரம்பரிய இயற்கை வேளாண்மை பாகம்1" எனும் நூலை எழுதிய முனைவர் அருணா தொல்காப்பியன் அவர்களுக்கும் பதிப்பித்த அருணா பதிப்பகத்தாருக்கும், சுற்றுப்புறவியல் எனும் வகைப் பாட்டில் ஒரு மனிதன் ஒரு காடு ஓர் உலகம் எனும் நூலை எழுதிய சந்துரு அவர்களுக்கும் பதிப்பித்த கிழக்குப் பதிப்பகத்தாருக்கும், கணினியியல் எனும் வகைப்பாட்டில் செகம் புகழும் செயற்கை நுண்ணறிவு எனும் நூலை எழுதிய ப. குணசேகர் அவர்களுக்கும் பதிப்பித்த பண்புப் பதிப்பகத்தாருக்கும், நாட்டுப்புறவியல் எனும் வகைப்பாட்டில் சிலப்பதிகாரம் நாட்டுப்புறவியல் நோக்கு எனும் நூலை எழுதிய பெ. சுப்பிரமணியன் அவர்களுக்கும் பதிப்பித்த காவ்யா பதிப்பகத்தாருக்கும், வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம் எனும் வகைப்பாட்டில் நிரல்மொழி எனும் நூலை எழுதிய திருமதி காதம்பரி அவர்களுக்கும் பதிப்பித்த இலக்கியப் படைப்பு குழுமம் பதிப்பகத்தாருக்கும், இதழியல், தகவல் தொடர்பு எனும் வகைப்பாட்டில் நலவாழ்வு நம் கைகளில் எனும் நூலை எழுதிய மருத்துவர் அ. வேணி அவர்களுக்கும் பதிப்பித்த சிவாவேணி பதிப்பகத்தாருக்கும், பிறநாட்டு வெளியீடுகள் எனும் வகைப்பாட்டில் மெய்ப்பாடுகள் (வாழ்வனுபவக் கட்டுரைகள்) எனும் நூலை எழுதிய இரா. திருப்பதி வெங்கடசாமி அவர்களுக்கும் பதிப்பித்த நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகத்தாருக்கும், விளையாட்டியல் எனும் வகைப்பாட்டில் தமிழ் மண் தந்த விளையாட்டுகள் எனும் நூலை எழுதிய மா.க.சுப்ரமணியன் அவர்களுக்கும் பதிப்பித்த சு. சாந்தி, செந்தில் நாதன் பதிப்பகத்தாருக்கும், மகளிர் இலக்கியம் எனும் வகைப்பாட்டில் தண்டனைக் களமாகும் பெண்ணுடல் எனும் நூலை எழுதிய திருமதி சுகிதா சாரங்கராஜ் அவர்களுக்கும் பதிப்பித்த ஹெர் ஸ்டோரிஸ் பதிப்பகத்தாருக்கும், தமிழர் வாழ்வியல் எனும் வகைப்பாட்டில் தமிழ் மலையாளப் பண்பாட்டு ஒப்பீடு எனும் நூலை எழுதிய ப.ஜெயகிருஷ்ணன் அவர்களுக்கும் பதிப்பித்த சாரதா பதிப்பகத்தாருக்கும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களால் 07.02.2025 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி அளவில் சென்னை, அடையாறு, இராஜா அண்ணாமலைபுரம், பசுமை வழிச் சாலை (இசைக் கல்லூரிச் சாலை)யில், உள்ள தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே. ராஜாராமன், முன்னிலையில் நடைபெற்ற விழாவில் உயர்த்தப்பட்ட வீதத்தில் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் மனைவி எழிலினி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, பிப்.8-

முன்னாள் அமைச்சர் மறைந்த க.சுந்தரம் அவர்களின் மனைவி எழிலினி சுந்தரம் மறைவுற்றார். கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் அமைச்சர், முன்னாள் கழக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் நினைவில் வாழும் க.சுந்தரம் அவர்களின் மனைவி திருமதி.எழிலினி சுந்தரம் (வயது 70) அவர்கள் நேற்று இரவு 7 மணியளவில் உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவு செய்தி அறிந்து அவரது உடலுக்கு மலர் வளையம் அணிவித்து கழகத்தினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அவரது இறுதி சடங்குகள் இன்று (8.2.2025 சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் அவரது இல்லம் அமைந்துள்ள எண்.39, பாலாஜி நகர், மீஞ்சூர் என்ற முகவரியில் நடைபெற உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.



சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் தெற்கு பகுதி, 138அ வட்ட செயல்வீரர்கள் கூட்டம், வட்ட பொறுப்பாளர் ஜம்புமுருகன் தலைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் சிறப்புரையாற்றினார். இதில் விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கணக்குநிலைக்குழு தலைவர் க.தனசேகரன், பகுதி செயலாளர் கே.கண்ணன், தொகுதி பொறுப்பாளர் உமாகாந்த், மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் பிஎஸ்.முருகேசன், எஸ்டி.தங்கராஜ், பகுதி துணை செயலாளர் அஜந்தாரவி, வட்ட செயலாளர்கள் இரா.செழியன், சோ.செந்தில்குமார் பூக்கடை ஆர். பழனிச்சாமி, பிகே.குமார், அ.கதிரேசன், வழக்கறிஞர் சதீஷ்கண்ணன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் தம்பி ஆர்.சசிகுமார், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் நிஷா, மாவட்ட வர்த்தகரணி தலைவர் அண்ணன் ஆர்.ராமமூர்த்தி, பாரிநகர் சசி எம்.வீரா, நந்தகோபால், கருப்பசாமி, முத்துமாரியப்பன், சண்முகம், கே.வி.எஸ்.சுரேஷ், வட்ட நிர்வாகிகள் ஏ.அசோக், சுரேஷ், கல்பனா, சபரி, சக்கரவர்த்தி, கன்னிமுருகன், அமுல்ராஜ், ரமேஷ், பாபு, மணிகண்டன், மூர்த்தி, கமலக்கண்ணன், பார்த்தீபன் சபரி சி.எச்.தினேஷ் சுதா, சதீஷ், ஜெய், குமார், தென்னரசு, குமார், கந்தன், அனீஷ், கந்தன், மணி, அனல்ஜயப்பன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.